பற்றி மதுரை துணை ஆணையரிடமிருந்து விவரம் கேட்கப்பட்டுள்ளது. கோயிலின் நிதி போதுமானதாக இருந்தால் எதிர்காலத்திலே அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

நூல்களை வெளியிட உதவி

* 74 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

எழுத்தாளர்களின் நூல்களை அரசே தனி அமைப்பின் மூலம் ஆராய்ந்து தரமான நூல்களை அச்சிடுவதற்கும் விற்பனை செய்வதற்கும் தனித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை வெளியிடுவதற்குத் தமிழ் வளர்ச்சி இயக்குநர், அரசின் சார்பில், நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, எழுத்தாளர்களே நிறைந்திருக்கும் இந்த அமைச்சரவையின் காலத்திலாவது Southern Language Book Trust போன்ற அமைப்பை உருவாக்கி நல்ல கட்டுரை நூல்களை, கவிதை நூல்களை எழுதும் எழுத்தாளர்களின் எழுத்துக்களையெல்லாம் சேகரித்து, அரசே அவற்றை வெளியிட, தனி நிறுவனத்தை ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அப்படிப் பட்ட யோசனை இப்பொழுது இல்லை.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, தரமான எழுத்தைப் பற்றியும், தரமான புத்தகங்களைப்பற்றியும் கேள்வி கேட்டார்கள். ஆனால், இன்றைக்குக் குடும்பப் பத்திரிகை என்று சொல்லக்கூடிய பல பத்திரிகைகளில் ஆபாசமான படங்களையும், ஆபாசமான கதைகளையும் எழுதுகின்றார்கள். நான் செக்ஸைப்பற்றிச் சொல்லவில்லை. கம்பனும், வள்ளுவனும் சொல்லாத செக்ஸைப்பற்றி இவர்கள் சொல்லப் போவதில்லை. ஆனால், ஒழுக்கக்கேடான பல நூல்களை எழுதுகிறார்கள். அவைகளையும் தடை செய்யுமா என்று கேட்டுக்கொண்டு, தலைவரவர்களே, உங்கள் மூலம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சில புத்தகங்களைப் படித்திருக்க மாட்டார்கள். சில புத்தகங்கள் பிரச்சினைகளைப் பார்த்துப் போடாமல், *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1973 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கேள்வியைப் போடுங்கள், மற்ற விவரங்களைப் பேசக்கூடாது.

திரு. கோவை செழியன் : இப்படி அசிங்கமான புத்தகங்களைப் போடுகிறார்கள். அவர்களை நடுரோட்டில் வைத்துச் சுட்டால் என்ன என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆபாசமான புத்தகங்களை அவ்வப்பொழுது காவல் துறையினர் பறிமுதல் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட புத்தகங்களை வெளியிடுபவர்கள்மீது நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். ஆனால் கேள்வியில் கேட்டிருப்பது, தரமான நூல்களை எழுதுபவர்களுக்கு உதவி அளிக்கப்படுமா என்ற கருத்தைக் கேட்டிருக்கிறார்கள். இதற்கான திட்டம் அரசாங்கத்தின் நடைமுறையில் இருந்து வருகிறது.

Scout Movement

* 75 *Q.*—Thiru S. SANGUMUTHU THEVAR : Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the steps taken to expand the Scout Movement in this State?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநிலத்திலுள்ள எல்லா இடைநிலை மற்றும் ஆரம்பப் பள்ளிகளில் சாரணத் திட்டத்தினை அமுல் செய்ய சம்பந்தப்பட்ட ஆய்வு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இது குறித்து முன்னேற்றத்தினையும் அவ்வப்போது தெரியப்படுத்த அவர்கள் வேண்டப்பட்டுள்ளனர். தவிர, சென்னையிலுள்ள மாநில பாரத சாரணர், மற்றும் சாரணியர் இயக்க (Bharat Scouts and guides) தலைமையிடத்தின் தொடர்போடு சாரண ஆசிரியர்கள் மற்றும் சாரணியர் தலைவிகளுக்குத் தக்க பயிற்சி அளிக்குமாறும் வேண்டப்பட்டுள்ளனர். இத்திட்டம் நன்கு செயல்பட தங்களது ஒத்துழைப்பைத் தருமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களும் வேண்டப்பட்டுள்ளனர்.

Thiru N. DENNIS : May I know, Sir, whether the Government would take steps to make it compulsory?